

# தமிழ் பாலபாரதி

## வகுப்பு ஒன்று



- **Tele-MANAS Program**

**Tele-MANAS (Tele Mental Health Assistance and Networking Across States) (14416/ 1800-89-14416)**

Under the National Mental Health Program, the centrally sponsored scheme ‘Tele-MANAS’ is being implemented in the state of Maharashtra from October 2022. Under the Tele-MANAS Program, free 24 × 7 integrated and comprehensive mental health services are provided through the helpline number 14416. This includes treatment and counselling by experts for various mental problems. The information provided by you after calling the Tele-MANAS helpline remains completely confidential, so students, parents and teachers should feel free to call the helpline number and tell them about their problems and doubts and get guidance on it. Tell others to take help from this facility as well.

Tele-MANAS app has been launched by the Central Government and is also available in Marathi language. This app provides complete information about mental health. Tele-MANAS app is available free of cost.

இப்பாடநூல் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரா, புனே தயாரித்த பாடத்திட்டம் மற்றும் பாடநிர்ணயத்தின்படி தயாரிக்கப்பட்டு, இந்த பாடநூல் இந்நிறுவத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டது. அரசு தீர்மானம் எண் : அபயாஸ்-2116/(ப்ர எண் 43/16) எஸ்டி-4 நாள் 25/04/2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 16/04/2025 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2025-2026 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்
# பாலபாரதி
## வகுப்பு ஒன்று



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும்
பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே - 411004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R. Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதனால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி – ஒளி வடிவிலான கற்றல், கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு : 2025
மறு பதிப்பு : 2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம் புனே-411004

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம் இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் ஆய்வுக்கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக் கூடாது.

## தமிழ் பாடநூல் குழு

திருமதி. பானுமதி சங்கர் (தலைவர்)
திருமதி. கீதா கிறிஸ்டோபர் (உறுப்பினர்)
திரு. பி. கார்த்திக் (உறுப்பினர்)
திருமதி. வேணி பால்ராஜ் (உறுப்பினர்)
திருமதி. இ. மரிய வசந்தா சேவியர் (அழைப்பு உறுப்பினர்)
திருமதி. சித்ரா பாலசுப்ரமணியன் (அழைப்பு உறுப்பினர்)
முனைவர் துலசி பாரத் பூசன் (உறுப்பினர், செயலாளர்)

## Tamil Language Committee

**Smt. Bhanumathy Shankar** (Chair Person)
**Smt. Geetha Christopher** (Member)
**Sri. P. Karthik** (Member)
**Smt. Veni Paulraj** (Member)
**Smt. Maria Vasantha Xavier** (Invitee Member)
**Smt. Chitra Balasubramanian** (Invitee Member)
**Dr. Thulasi Bharat Bhushan** (Member Secretary)

தமிழ் பாடநூல் ஒருங்கிணைப்பாளர்
**முனைவர் துலசி பாரத் பூசன்**
சிறப்பு அதிகாரி - தெலுகு
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் கழகம், புனே.

**Co-Ordinator**
**Dr. Thulasi Bharat Bhushan**
Special Officer - Telugu (C.B)
Maharashtra StateText Book Bureau, Pune.

அட்டை படம்
**திரு. படு ராமதாஸ் பாக்லே**
**Cover Design**
**Sri Bhatu Ramdas Bagle**

படங்கள்
**திரு. பாருக் நதாப்**
**Illustrations**
**Sri Farukh Nadaf**

அச்சுகோர்ப்பு
**ஜே. கே. ஆர்ட்ஸ்**
மும்பை

Type Setting : **JK Arts Mumbai**
Paper : 70 GSM Creamwove
Print Order No. : N/PB/2026-27/(500)
Printer : Sharp Industries, Raigad

வெளியிடுவோர்
**திரு. சச்சின் கிசன் மேத்தா**
I/C கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கக் கழகம்,
மும்பை - 400 025.

Publisher
**Sri. Sachin Kisan Mehta**
I/C Controller
Maharashtra StateTextbook Bureau,
Prabhadevi, Mumbai - 400 025.

தயாரிப்பு :
**திருமதி மிதாலி ஷிதாப்**
I/C முதன்மை அதிகாரி
**திரு. ராஜேந்திர பண்ட்லோஸ்கர்**
தயாரிப்பு அதிகாரி

**Production**
**Smt. Mitali Shitap**
I/C Chief Production Officer
**Sri. Rajendra Pandloskar**
Production Officer

## இந்திய அரசமைப்பு

### முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை
**இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச்**
**சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு
குடியரசாக நிறுவவும்,
அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய,
பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன்
வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு
இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை,
வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை
எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த
உறுதியுடையராய்,
**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர்
இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த**
**அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே**
**வழங்கிக்கொள்கிறோம்.**

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### பகுதி 4 A

## குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

**அன்பு குழந்தைகளே!**

இந்த வருடம் நீங்கள் முதலாம் வகுப்புக்கு வந்துவிட்டீர்கள். உங்களை அன்புடன் வரவேற்கிறேன். தமிழ் பாலபாரதி 1-ஆம் வகுப்பு முதல்மொழி பாடப்புத்தகத்தை உங்கள் கைகளில் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் அதன் அடிப்படையில் அடிப்படைக் கல்வி பாடத்திட்டம் 2024 ஆகியவற்றை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தப் பாடப்புத்தகம் உங்களுக்கு நிச்சயமாகப் பிடிக்கும். நீங்கள் 1-ஆம் வகுப்பில் நுழைவதற்கு முன்பு மழலையர் பள்ளி மட்டத்தில் மொழிக் கல்வி மூலம் சில எழுத்துகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பீர்கள். சில பாடல்கள், கதைகள் மற்றும் பல்வேறு கலைகள் மூலம் நீங்கள் தமிழ் மொழிக்கு அறிமுகமானவர்கள் இந்த ஆண்டும் பட விளக்கங்கள், பாடல்கள், கதைகள், படக் கதைகள், எழுத்துகள், துணையெழுத்துகள், மொழிப்புதிர்கள், மொழி விளையாட்டுகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளைப் புதிய பாடப்புத்தகத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளலாம். இந்தப் பாடநூல் உங்கள் மொழி கற்றல் அடித்தளத்தை வலுப்படுத்தவும், தமிழை நன்றாக எழுதவும், படிக்கவும், பேசவும் நிச்சயமாக உதவும். உங்கள் மொழிக்கற்றலை ஆர்வமாகவும் ஆனந்தமாகவும் மாற்ற இந்தப் பாடப்புத்தகம் உள்ளடக்கத்திற்கு பொருத்தமான கவர்ச்சிகரமான மற்றும் திறன்மிக்க விளக்கப்படங்களை வழங்குகிறது.

இந்தப் பாடப்புத்தகத்தில் பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்கள் அனைத்தையும் நீங்கள் மெல்லிசையாகவும், தாளமாகவும் பாடமுடியும். இந்தப் பாடல்களைப் பாடுவது உங்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும். பாடப்புத்தகத்திலிருந்து பங்கேற்பு வாசிப்புகளுடன் விளக்கப்பட்டுள்ள பல்வேறு கதைகளைக் கேட்பதிலும் வாசிப்பதிலும் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். கதைகளைக் கேட்பதிலும் சொல்வதிலும் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவீர்கள். பாடப் புத்தகத்திலுள்ள விளக்கப்படங்களைப் பார்க்கும்போது நீங்கள் நிகழ்வுகளில் மூழ்கி, அவற்றை அடிப்படையாக கொண்ட நிறைய அரட்டை மற்றும் விவாதங்களில் ஈடுபடுவீர்கள்.

பாடப்புத்தகத்தில் எழுத்துக் குழுக்கள் மற்றும் வாசிப்புப் பகுதிகள் கட்டமைக்கப்பட்ட விதத்திலிருந்து நீங்கள் படிப்படியாக எழுத்துகளையும் துணையெழுத்துகளையும் அடையாளம் காணத் தொடங்குவீர்கள். அதன் அடிப்படையில் நீங்கள் வாசிப்புப் பகுதியைப் படிக்கலாம். இந்த விளக்கப்பட வாசிப்புகளின் வடிவமைப்பு மற்றும் தளவமைப்பு உங்களுக்கு நிச்சயமாக பிடிக்கும். எழுத்துகளைக் கற்கும்போது, படங்களிலிருந்து சொற்களைக் கண்டுபிடிப்பது எழுத்துகளைக் கண்டுபிடிப்பது, எழுத்துகளை எழுதுவது போன்ற பயிற்சிகள் மூலம் ஒவ்வொரு எழுத்தையும் அறிய முடியும். உயிரெழுத்து குறியீடுகளைப் பற்றி நீங்கள் அறிந்தவுடன் சிறிய வார்த்தைகளையும் பின்னர் சிறிய வாக்கியங்களையும் எழுத முடியும். பல வார்த்தை விளையாட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். பயிற்சி மற்றும் விளையாட்டு மூலம் முழுமையாக கற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பாடப்புத்தகத்தில் உள்ள இந்த விடயங்கள் மூலம் உங்கள் மொழி அறிவு மேலும் மேலும் உறுதியாகும். முதல் வருட இறுதிக்குள், நீங்கள் நிச்சயமாகத் தமிழை நன்றாகப் பேச, படிக்க, எழுத கற்றுக் கொள்வீர்கள். அன்புள்ள குழந்தைகளே, நீங்கள் தமிழை மகிழ்ச்சியுடன் கற்க என் வாழ்த்துகள்!

புனே
நாள்: 30 ஏப்ரல் 2025,
இந்திய ஆண்டு: 10 வைசாக் 1947
அக்ஷய திருதிய

**திரு. கிருஷ்ணகுமார் பாஸ்கரராவ் பாட்டில்**
**இயக்குநர்**
மகாராஷ்டிரா மாநிலப் பாடநூலாக்கம்
மற்றும் பாடத்திட்ட ஆய்வுக்கழகம், புனே.

## தமிழ் (முதல் மொழி) வகுப்பு - 1 கற்றல் விளைவுகளின் பட்டியல்

| CG | திறன் | கற்றல் விளைவு எண் | கற்றல் விளைவுகள் | |
|---|---|---|---|---|
| | 9.1 | 9.1.1.1. | நீண்ட (4-8 வாக்கியங்கள்) பாடல்கள் / கவிதைகளை (பழக்கமில்லாத) கவனத்துடன் கேட்டு அவற்றைப் பற்றி உரையாடுதல் மற்றும் கேள்விகள் கேட்டல். | 1,11,34,47 |
| | | 9.1.2.1. | நீண்ட (10 வாக்கியங்கள்) பாடல்கள் / கவிதைகளைப் பாடுதல் / ஒப்புவித்தல். | 1,15,20,25 |
| | 9.2 | 9.2.1.1. | ஆசிரியர் உதவியுடன் சிறு பாடல்கள் / கவிதைகளை விரிவாக்குதல், உருவாக்குதல். | 25,47,66 |
| | 9.3 | 9.3.1.1. | உரையாடல்களில் ஈடுபட்டு அவர்கள் பேசும் முறை வரும்வரை காத்திருந்து பேசுதல்; பிறரைப் பேச அனுமதித்தல். | 2,8,19,61 |
| | | 9.3.2.1. | சத்தமாக வாசிக்கப்பட்ட அல்லது வகுப்பில் விவாதிக்கப்பட்ட கற்பனையற்ற பாட உள்ளடக்க உரையாடலில் ஈடுபடுதல், தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து பெற்ற அறிவை இணைத்து அதைப்பற்றி பேசுதல். | 2,19,25,50 |
| | 9.4 | 9.4.1.1. | ஒரு செயலைச் செய்ய பல படிகளைக் கொண்ட வழிமுறைகளைப் (கட்டளைகள்) பின்பற்றுதல் (ஒரே நேரத்தில் 8 முதல் 9 வழிமுறைகள்). | 28,29,31 |
| | | 9.4.2.1. | ஒரு செயலைச் செய்ய பல படிகளை உள்ளடக்கிய தெளிவான வழிமுறைகளை (கட்டளைகள்) வழங்குதல் (ஒரு நேரத்தில் 8 முதல் 9 வழிமுறைகள்) | 11,28,31, 37 |
| | 9.5 | 9.5.1.1. | ஒரு கதையில் உள்ள கதாபாத்திரங்களில் கதைக்களம் மற்றும் உணர்ச்சியின் உள்நோக்கத்தை விளக்குதல் மற்றும் கதையை உரையாடலுடன் சொல்லுதல். | 3,4,14,37 |
| | 9.6 | 9.6.1.1. | அவர்களின் சொந்த சிறுகதைகளை எளிமையான கதைக்களங்கள் மற்றும் கதாபாத்திரங்களுடன் விவரித்தல். | 5,40 |
| | 9.7 | 9.7.1.1. | படம் மற்றும் சூழல் குறிப்புகளைப் பயன்படுத்தி உரைகளில் தெரியாத சொற்களின் பொருளைக் ணித்தல். | 8,11,29 |
| | 10.1 | 10.1.1.1. | சொற்களிலிருந்து (எழுத்துகளின்) அசைகளின் ஒலிகளைப் பிரித்தல். | 48,57,16,44 |
| | 10.1 | 10.1.3.1. | உயிரெழுத்துகள் மற்றும் மெய்யெழுத்துகளின் ஒலிகளை அசை ஒலிகளிலிருந்து பிரித்து எழுதுதல். | 16,44,48,77 |
| | 10.2 | 10.2.2.1. | எளிய நிறுத்தற் குறிகளை அடையாளம் காணல் (முற்றுப்புள்ளி, கேள்விக்குறி) | 62,52,76 |
| | 10.3 | 10.3.1.1. | அனைத்து எழுத்துகளையும் (வடமொழி எழுத்துகள் உட்பட) படித்து தொடர்புடைய ஒலிகளுடன் இணைத்தல். | 6,7,9,77 |
| | 10.3 | 10.3.2.1. | அறியப்பட்ட இரட்டை மெய்யெழுத்து சொற்களை அடையாளம் காணல். அடிக்கடி பயன்படுத்தப்படும் பல அசைகள் சொற்களைப் படித்தல் (மெய் தொகுப்புகள்) | 6,9,10,12,77 |
| | | 10.3.3.1. | அனைத்து எழுத்துகளின் உதவியுடன் சொந்த வார்த்தைகளை எழுதுதல். அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் சொல்லுதல். | 61,70,73 |
| | | 10.3.4.1. | கற்றறிந்த எழுத்துகளின் உதவியுடன் சொந்த வாக்கியங்களை எழுதுதல். | 68,70,73 |
| | 10.4 | 10.4.4.1. | குறுகிய பத்திகளை பொருத்தமான குரல் ஏற்ற இறக்கத்துடன், இடைநிறுத்தத்துடன் துல்லியமாக வாசித்தல். | 56,76 |
| | 10.5 | 10.5.1.1. | சமமான உரை மற்றும் காட்சி உள்ளடக்கம் கொண்ட புத்தகங்களின் சுதந்திர வாசிப்பைத் தொடங்குதல். | 75,61,79 |
| | | 10.5.2.1. | அறிமுகமில்லாத கதைப் புத்தகங்களைப் படித்தல். ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் புரிந்து கொள்ளுதல். கதைக் களத்தையும் கதாபாத்திரங்களையும் அடையாளம் காணுதல். | 5,14,48,77 |
| | 10.6 | 10.6.1.1. | சிறு கவிதைகளைப் படித்து கவிதையின் நேரடி அர்த்தத்தை விவரித்தல். | 66,28,31 |
| | 10.7 | 10.7.1.1. | ஒரு விளையாட்டை விளையாடுவதற்கான எளிய வழிமுறைகளைப் படித்து அதை மற்றொரு குழுவுடன் விளையாடுதல். | 11,46,65,71 |
| | 10.8 | 10.8.1.1. | படத்தின் வரிசையை உருவாக்கி, வழக்கமான எழுத்து முறையில் குறுகிய வாக்கியத்தை எழுதுதல் (எழுத்துகளின் உதவியுடன்) | 13,40,45,62 |
| | | 10.8.1.2. | சொற்கள் மற்றும் குறுகிய வாக்கியங்களின் உதவியுடன் படத்திற்கு உரை எழுதி விவரித்தல். | 73,78,61 |
| | | 10.8.2.1. | சுமார் 3-4 அசை கொண்ட சொற்களை சொல்லக்கேட்டு எழுதுதல். | 49,54,56 |
| | | 10.8.2.2. | எழுத்துகளைப் பயன்படுத்தி 2-3 சொந்த வாக்கியங்களை எழுதுதல் (எ.கா. தனது சொந்த அனுபவங்கள் மூலம், படம் அல்லது பொருளை விவரித்தல்) | 28,34,50,68 |
| | | 10.8.5.2. | வகுப்புத் தோழர்கள் எளிய செயல்களை செயல்படுத்த, எளிய மற்றும் குறுகிய வழிமுறைகளை கூறுதல். | 45,65,71 |
| | 10.9 | 10.9.1.1. | புத்தகங்களை தேர்வு செய்வதில் விருப்பங்களை விளக்குதல். சிறு புத்தகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒழுங்காக வாசித்தல். | 14,37,68,73 |
| | | 10.9.2.1. | மாணவர்கள் தெளிவாக வாசிக்க எழுத அறிதல். | 68,76,78 |

## ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்காக...!

குழந்தைகளுக்கு கற்றல் என்பது பிறப்பிலிருந்தே தொடங்குகிறது. கற்றல் என்பது கேட்டல், பார்த்தல் மற்றும் செய்வதை பார்த்து செய்தல் மூலமாக ஆரம்பிக்கிறது என்பது நாம் அறிந்த ஒன்றாகும். குழந்தைகள் பள்ளி செல்ல ஆரம்பிக்கும் முன்னே பேசவும் அறிவுரைகளைப் புரிந்து கொள்ளவும் பெற்றோர், உறவினர் மற்றும் சுற்றுப்புறத்தின் வாயிலாக அறிவைப் பெற்றுள்ளனர். இது முறைசாரா முறையில் பெற்ற அறிவாகும். இதனை முறையான கல்வியாக கொண்டு செல்லும் பணி இப்பாட நூலை கற்பிப்போரின் செயல்பாட்டில் உள்ளது. இப்பாடநூல் மாணவர்களின் கற்றல் திறன், பாடத்திட்டம், பாடக்கருப் பொருள், செயல் திட்டம், கற்றல் விளைவுகள் ஆகிய கூறுகளை பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகளிடமிருந்து அவர்களின் தனித் திறனை வளர்க்கும் வகையில் கற்பிக்கும் முறைகளை கையாள கீழே சில குறிப்புகளுடன் அதன் பக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

- எளிய குழந்தைப் பாடலை தனியாக, குழுவாக அபிநயத்துடன் பாட உற்சாகப்படுத்தவும். (1)
- கட்டங்களில் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படங்களை ஒட்டவும். அவர்களைப் பற்றி கூறமாணவர்களுக்கு உதவவும். (2)
- படங்களைப் பார்த்து கதையை தனது சொந்த நடையில் சொல்ல மாணவர்களுக்கு உதவவும். இதுபோன்று மாணவர்கள் கற்பனையில் வேறு கதைகளை கூற ஊக்குவிக்கவும். (4)
- படத்தில் உள்ளவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை குழந்தைகளோடு கலந்துரையாடவும். குழந்தைகளுக்கு பிடித்த விளையாட்டுகள் மற்றும் விளையாடும் முறை பற்றி பேசத் தூண்டுதல் தரவும். (8)
- எளிய குழந்தைப் பாடலை அபிநயத்துடன் பாடி ஆடுதல். ஆசிரியர் பாடலைப் பாடி மாணவர்களை கேட்கச் செய்யவும். மாணவர்களை தனியாக, குழுவாக அபிநயத்துடன் பாட கூறவும். கேள்விகள் கேட்க வாய்ப்பளிக்கவும். (11)
- படங்களைப் பார்த்து கதையை தனது சொந்த நடையில் சொல்ல மாணவர்களுக்கு உதவவும். முதல் கதையில் ஆடுகள் பிரச்சனைக்கு சுமுகமாக தீர்வு காணவில்லை. இரண்டாவது கதையில் ஆடுகள் ஒன்றுக்கொன்றுவிட்டு கொடுத்து வெற்றிப் பெற்றுள்ளன என்பதை மாணவர்களின் கவனத்துக்கு கொண்டு வரவும். கதைகள் குறித்த தங்கள் கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பு ஏற்படுத்தி தரவும். (14)
- மேலே உள்ளபடத்தைப்பார்த்து ஆசிரியர்இருமாணவர்களுடன்வகுப்பறையில்உரையாடவும்.பிறமாணவர்களைக்கேட்கச்செய்யவும். உரையாடல் சார்ந்த வினாக்களைக் கேட்கவும். வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களையும் தங்கள் அனுபவங்களைப் பற்றி உரையாடச் செய்யவும். (18)
- ஆசிரியர் பாடலைப் பாடி மாணவர்களை கேட்கச் செய்யவும். பாடலைக் கேட்டு புரிந்துள்ளனரா என்று அறிய சிறு சிறு வினாக்களைக் கேட்கவும். மாணவர்களை தனியாக, குழுவாக அபிநயத்துடன் பாட கூறவும். கற்பனைக்கு ஏற்ப பாடலை உருவாக்க கூறவும். (25)
- இதுபோன்று பிற காய்கறிகளுக்கான விடுகதைகளை உருவாக்க, மாணவர்களுக்கு உதவவும். வீட்டில் பெரியவர்களிடம் விடு கதைகளைக் கேட்டு வந்து வகுப்பில் கூற வாய்ப்பு தரவும். (28)
- மாணவர்கள் பிற பழங்கள் தங்களை எவ்வாறு அறிமுகப்படுத்தும் என கற்பனை செய்து கூற செய்யவும். பழங்களின் முகமூடிகள் செய்து பயன்படுத்த செய்யவும். (31)
- பாடலை பாடி ஆடி மகிழச் செய்யவும். தங்கள் செல்ல பிராணிகள் பற்றி பேச செய்யவும். அவை பற்றி ஓரிரு வாக்கியங்கள் கவிதையாக கூற உதவி செய்யவும். (34)
- படங்களைப் பார்த்து கதையை தனது சொந்த நடையில் சொல்ல மாணவர்களுக்கு உதவவும். இதுபோன்று வேறு கதைகளை கற்பனை செய்து கூற மாணவர்களை ஊக்குவிக்கவும். (37)
- படத்தைப் பார்த்து வினாக்கள் கேட்பதற்கு உதவவும். (யார்? என்ன? எப்படி? ஏன்? எவ்வாறு?) இப்படத்தில் காணப்படும் விலங்குகளின் பெயர்களைக் கூறவும். பறவைகளின் பெயர்களைக் கூறவும். உனது கற்பனைக்கு ஏற்ப படம் ஒன்று வரையவும். (40)
- எளிமையான இந்தப் பாடலை அபிநயத்துடன் தனியாக, குழுவாகப் பாடி ஆடுதல். இதுபோன்ற ஒலிநயப் பாடல்களை உருவாக்க மாணவர்களுக்கு உதவவும். ஒலி நயத்துடன் புரிந்து பாராட்ட ஊக்குவிக்கவும். ஆசிரியர் பாடலைப் பாடி மாணவர்களைக் கேட்கச் செய்யவும். பாடலைக் கேட்டு மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் அபிநயத்துடன் பாட உற்சாகப்படுத்தவும். (47)
- மேலே உள்ள ஒவ்வொரு படத்திலும் உள்ள நல்ல பழக்கவழக்கங்களைப் பற்றி குழந்தைகள் தங்கள் சொந்த நடையில் கூறுவதற்கு உற்சாகப்படுத்தவும். தேவைப்படும் இடங்களில் உதவவும். (62)
- ஆசிரியர் பாடியபின் மாணவர்களை அபிநயத்துடன் பாட உற்சாகப்படுத்தவும். மாணவர்களை தங்கள் செல்ல பிராணி பற்றி கூற சொல்லவும். (66)
- பாடலை மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் அபிநயத்துடன் பாட உற்சாகப்படுத்தவும். மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழு கேள்வி-மறு குழு பதில் என விளையாடச் செய்யவும். பாடலில் வராத பிற பொருள்களின் பெயர்களைக் கூறி விளையாட்டை தொடர செய்யவும். (71)
- ஆசிரியர் மாணவர்களிடம் பொங்கல் விழா தங்கள் வீடுகளில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்று கலந்துரையாட செய்யவும். பிற மாநிலங்களில் பொங்கல் விழா எவ்வாறு கொண்டாடப்படுகிறது என வகுப்பில் கலந்துரையாடவும். (76)

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | பள்ளிக் கூடம் வாரீர் (பாடல்) | 1 |
| 2. | எனது குடும்பம் | 2 |
| 3. | குடைப் பயணம் | 3, 4 |
| 4. | எழுதுதல் ஆயத்தம் | 6,9,12 |
| 5. | சிறுவர் பூங்கா | 8 |
| 6. | வா மழையே வா (பாடல்) | 11 |
| 7. | விட்டுக் கொடுப்போம், வெற்றி பெறுவோம் | 14 |
| 8. | எழுத்துகள் நாங்கள் வருகிறோம் பாருங்கள் (பாடல்) | 15 |
| 9. | உயிர் எழுத்துகள் (அ முதல் ஔ வரை மற்றும் ஃ) | 16,17,21,22 |
| 10. | கடற்கரை | 19 |
| 11. | எழுத்துகள் நாங்கள் வந்திருக்கிறோம் பாருங்க! (பாடல்) | 20 |
| 12. | அ..ஆ..இ..ஈ.. கற்போம் (பாடல்) | 25 |
| 13. | மெய் எழுத்துகள் | 26,29,32,35,38,41 |
| 14. | நான் யார்? | 28 |
| 15. | ஆரோக்கியமாக வாழ்வோம் | 31 |
| 16. | மியாவ் மியாவ் பூனைக்குட்டி (பாடல்) | 34 |
| 17. | நரிகளும் திராட்சைத் தோட்டமும் | 37 |
| 18. | காட்டுக்குள்ளே ஓவியப் போட்டி | 40 |
| 19. | உடல் உறுப்புகள் | 43 |
| 20. | துட்டு தந்தால் லட்டு (பாடல்) | 46 |
| 21. | என் பட்டம் (பாடல்) | 47 |
| 22. | உயிர்மெய் எழுத்துகள் (க முதல் னௌ வரை) | 48,51,53,55,58,60,63,67,69,72,74,77 |
| 23. | பள்ளியில் புதுமை | 50 |
| 24. | எண்ணி மகிழ்வோம் (பாடல்) | 57 |
| 25. | நல்ல பழக்க வழக்கங்கள் | 62 |
| 26. | வண்ணங்கள் | 65 |
| 27. | தோ...தோ... நாய்க்குட்டி (பாடல்) | 66 |
| 28. | சுவைகள் (பாடல்) | 71 |
| 29. | பொங்கல் விழா | 76 |
| 30. | பள்ளி ஆண்டு விழா | 78 |
| 31. | எங்கள் குரல் கேட்பீர் (பாடல்) | 79 |
| 32. | தமிழ் எழுத்துகளின் அட்டவணை | 80 |

# 1. பள்ளிக்கூடம் வாரீர்.

● **பாடி மகிழ்வேன் !**

சின்னச் சின்னச் சிட்டுகளே!
வண்ணப் பட்டாம் பூச்சிகளே!
பள்ளிக்கூடம் பறந்தோடி வாங்க - நல்ல
பாடங்களைப் படிக்கலாமே நீங்க!

அம்மா அப்பா ஆசைகளே!
ஆயிரம் ஆயிரம் கனவுகளே!
- ||பள்ளிக்கூடம்||

வெற்றி மாலை பற்றிச் சூடும்
பாரதத் தாயின் பிள்ளைகளே!
- ||பள்ளிக்கூடம்||

அறிவு ஆற்றல் திறமைகள்
அனைத்தும் வளரும் பாருங்க!
-||பள்ளிக்கூடம்||

-ரெ. சிவா






**உரையாடி மகிழ்வோம்!**

1. நீ யாருடன் பள்ளிக்கு செல்வாய்? 2. உங்கள் பள்ளியின் பெயர் என்ன?
3. பள்ளியில் உன்னுடைய புதிய நண்பர்களின் பெயர்களை கூறு.

# 2. எனது குடும்பம்

- **உரையாடி மகிழ்வேன் !**



**எனது குடும்ப உறுப்பினர்கள்**



**உரையாடி மகிழ்வோம்!**

1. படத்தில் உள்ள குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
2. உனது குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
3. உனது வீட்டில் செல்லப்பிராணி உள்ளதா? அதன் பெயர் என்ன?
4. பதிலை ஒவ்வொருவராகக் கூறவும்.

# 3. குடைப்பயணம்

- படம் பார்த்து கதை கூறுவேன்.





**உரையாடி மகிழ்வோம்!**

1. உன் வீட்டில் யார் யாரெல்லாம் கதை சொல்வார்கள்?
2. நீங்கள் யாருக்காவது கதை சொன்னதுண்டா?
3. முயல் ஆற்றைக் கடந்து எப்படி தன் நண்பர்களிடம் சென்றது?

# படம் பார்த்து கதை சொல்வேன்



# முயல் கேரட்டை அடைய வழிகாட்டுவேன்!



**ஆசிரியர் குறிப்பு :**

- மேற்கூறிய கதைகளைப் போன்று வேறு பல கதைகளை காட்டி மாணவர்களை தங்கள் வீட்டு மொழியில் கூற சொல்லவும்.
- இதுபோன்று வேறு பல புதிர்களை தந்து வகுப்பறையில் மனமகிழ் சூழலை உருவாக்கவும்.

## 4. எழுதுதல் ஆயத்தம் – ட, ப, ம, ய, ழ, ர

- படத்தின் பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.




படம்




பட்டம்




மரம்




பம்பரம்




பழம்




முயல்

- நானே சொல்வேன்!

| | | |
|---|---|---|
| டட் | பப் | மம் |
| யய் | ழழ் | ரர் |
| பட் பட் | படபட | டப் டப் |

- நானே படிப்பேன்!

| | |
|---|---|
| படம் | பட்டம் |
| மடம் | மட்டம் |
| மரம் | பம்பரம் |

**ஆசிரியர் குறிப்பு!**

- எழுத்து – படம் – சொல் அட்டைகளை குழந்தைகளிடம் கொடுத்து எழுத்துகளை அறிமுகப்படுத்தவும்.
- ட, ப, ம, ர, ழ, ய எழுத்துகளை அறிமுகப்படுத்தி அவற்றின்மீது விரல் வைத்து தடவிப் பார்க்கச் செய்யவும். ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு குழந்தைகளைப் பேசத் தூண்டவும். சுண்ணக்கட்டியால் தரையில் எழுத்துகளை எழுதி சிறு கற்கள் மற்றும் மணிகள் கொண்டு அடுக்கச் செய்யவும். உப்புத்தாளில் எழுத்துகளை தயாரித்து தடவிப் பார்க்கச் செய்யவும்.

# எழுதிப் பழகுவேன்

- நானே சொல்வேன்!

ட ப ம ர ழ ய

ட ப ம ர ழ ய

ட ப ம ர ழ ய

- படத்தை எழுத்துடன் இணைப்பேன்!



ட



ப



ம



ழ

# 5. சிறுவர் பூங்கா

● உரையாடி மகிழ்வேன்!




**உரையாடி மகிழ்வோம்!**

1. படத்தில் உள்ள பூங்காவில் குழந்தைகள் என்னென்ன விளையாடுகிறார்கள்?
2. ஏற்ற இறக்க பலகை விளையாட எத்தனை நபர்கள் வேண்டும்?
3. நீங்கள் பூங்காவிற்கு யாருடன் விளையாடச் செல்வீர்கள்? என்னென்ன விளையாடுவீர்கள்?
4. பதிலை ஒவ்வொருவராகக் கூறவும்.

# எழுதுதல் ஆயத்தம் - க ச த ந ற ங

- படங்களின் பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.






ஙனம்






முறம்






நகம்






சக்கரம்






கப்பல்






தட்டு

## நானே சொல்வேன்!

| | |
|---|---|
| க க் | ற ற் |
| ந ந் | த த் |
| ச ச் | ங ங் |

## நானே படிப்பேன்!

| | |
|---|---|
| கடம் | தச்சர் |
| சடம் | சட்டம் |
| தடம் | கட்டம் |

**ஆசிரியர் குறிப்பு :**

எழுத்து - படம் - சொல் அட்டைகளை குழந்தைகளிடம் கொடுத்து எழுத்துகளை அறிமுகப்படுத்தவும்.

க, ச, த, ந, ற, ங எழுத்துகளை அறிமுகப்படுத்தி அவற்றின் மீது விரல் வைத்து தடவி பார்க்கச் செய்யவும். சுண்ணக்கட்டியால் எழுத்துகளை தரையில் எழுதி, சிறு கற்கள் மற்றும் மணிகள் கொண்டு அடுக்கச் செய்யவும். உப்புத் தாளில் எழுத்துகளை தயாரித்து தடவிப் பார்க்கச் செய்யவும்.

• **எழுதிப் பழகுவேன்!**

க ச த ந ற ங

க ச த ந ற ங

க ச த ந ற ங

• **எழுத்து - படம் - சொல் - இவற்றை இணைப்பேன்.**

| | | |
|---|---|---|
| ற |  | கப்பல் |
| ந |  | முறம் |
| த |  | சக்கரம் |
| ச |  | தச்சர் |
| க |  | நகம் |

# 6. வா மழையே! வா! வா!

● பாடி மகிழ்வேன்!

மழலைகளை மகிழ்விக்க
வா மழையே வா! வா!

மரங்களை தளிர்விக்க
வா மழையே வா! வா!

வளங்களை அள்ளித்தர
வா மழையே வா! வா!

தலைமுறை காக்க
வா மழையே வா! வா!

தாகம் தீர்க்க
வா மழையே வா! வா!

பூமியைக் குளிர்விக்க
வா மழையே வா! வா!

பூஞ்செடியை நடுகிறோம்
வா மழையே வா! வா!



**உரையாடி மகிழ்வோம்!**

1. மழை எங்கிருந்து வருகிறது?
2. நீங்கள் எவ்விதம் மழையில் ஆனந்தமாய் விளையாடுவீர்கள்?
3. மழையில் நனையாமல் இருக்க என்னென்ன பொருள்களை நீ உபயோகிப்பாய்?
4. காகிதக் கப்பல் செய்வோமா?



## எழுதுதல் ஆயத்தம் - ல,வ,ள,ஞ,ன,ண

- படத்தின் பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.

ல



லட்டு

வ



வண்டு

ள



விளக்கு

ஞ



ஞமலி

ன



அன்னம்

ண



பணம்

- நானே படிப்பேன்!

ல ல்

ஞ ஞ்

ண ண்

வ வ்

ள ள்

ன ன்

மணல்

வனம்

பணம்

மஞ்சள்

**ஆசிரியர் குறிப்பு :**

- எழுத்து - படம் - சொல் அட்டைகள் மூலம் எழுத்துகளை அறிமுகப்படுத்தவும். ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- ல, வ, ள, ஞ, ன, ண எழுத்துகளை அறிமுகப்படுத்தி அவற்றின் மீது விரல் வைத்து தடவிப் பார்க்கச் செய்யவும். தரையில் சுண்ணக்கட்டியால் எழுத்துகளை எழுதி, சிறு கற்கள் மற்றும் மணிகள் கொண்டு அடுக்கச் செய்யவும். உப்புத் தாளில் எழுத்துகளை தயாரித்து தடவிப் பார்க்கச் செய்யவும்.

• எழுதிப் பழகுவேன்.

ல வ ள ஞ ன ண

ல வ ள ஞ ன ண

ல வ ள ஞ ன ண

• எழுத்து - படம் - சொல் இவற்றை இணைப்பேன்.

| எழுத்து | படம் | சொல் |
| --- | --- | --- |
| ஞ |  | அன்னம் |
| ன |  | ஞமலி |
| ண |  | வண்டு |
| ல |  | லட்டு |
| வ |  | பணம் |
| ள |  | விளக்கு |

## 7. விட்டுக் கொடுப்போம்! வெற்றிப் பெறுவோம்!

- படம் பார்த்து கதை சொல்வேன்.



**உரையாடி மகிழ்வோம்!**

1. மேலே உள்ள இரண்டு கதைகளையும் வெவ்வேறாகச் சொல்லிப் பார்ப்போமா?
2. என்ன வேறுபாடுகளை கண்டீர்கள்?
3. ஆடுகள் ஏன் தண்ணீரில் விழுந்தன?
4. இரண்டாம் கதையில் ஆடுகள் எவ்வாறு பிரச்சனைக்கு சுமுகமாக தீர்வு கண்டன?
5. வாசிப்பு மூலையில் உள்ள படக்கதை புத்தகங்களைப் படிப்போமா?

## 8. எழுத்துகள் நாங்கள் வருகிறோம் பாருங்க!

• பாடி மகிழ்வோம்!



அஅஅஅஅ நான் தாங்க
அம்மா, அப்பா, அணில், அம்பு
சொல்லுங்க நீங்க!



ஆஆஆஆஆ வந்தேங்க
ஆடு, ஆறு, ஆமை சொல்லி
ஆடிப்பாடுங்க!



இஇஇஇஇ இந்தாங்க
இலை போட்டு இட்லியோட
இனிப்பும் வையுங்க!



ஈஈஈஈஈ பாருங்க
ஈச்சமரம் அடியிலே
ஈசல் பாருங்க!



உஉஉஉஉ நானுங்க
உலக உருண்டை உங்களுக்காக
சுத்தி வருதுங்க!



ஊஊஊஊஊ நான் தானேங்க
ஊட்டியிலே ஊசி இலைக்
காடு பார்த்தேங்க!

-குருங்குளம் முத்துராஜா

**ஆசிரியர் குறிப்பு :**

- மாணவர்களைப் பாடலை உரத்தக் குரலில் பாடச் சொல்லவும்.
- அ-ஊ வரையுள்ள உயிர் எழுத்துகளின் வரிசை மற்றும் அந்த உயிர் எழுத்துகளில் தொடங்கும் வார்த்தைகளில் கவனம் கொள்ள மாணவர்களுக்கு உதவவும்.

# ௯. உயிர் எழுத்துகள்

● படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்!

அ



அம்மா

ஆ



ஆடு

இ



இலை

● எழுதிப் பழகுவேன்

அ அ அ அ அ அ

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

இ இ இ இ இ இ

**ஆசிரியர் குறிப்பு :**

● ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.

● படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்!

ஈ



ஈ

உ



உரல்

ஊ



ஊதல்

● எழுதிப் பழகுவேன்

ஈ ஈ ஈ ஈ ஈ ஈ

ஈ ஈ ஈ ஈ ஈ ஈ

உ உ உ உ உ உ

உ உ உ உ உ உ

ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

வட்டத்தில் உள்ள எழுத்துகளை உடைய சொற்களை வண்ணமிடுவேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | - | அம்மா | ஏணி | ஐந்து |
| ஆ | - | எட்டு | பத்து | ஆடு |
| இ | - | ஆசை | இலை | அடுப்பு |
| ஈ | - | உடுக்கை | அப்பா | ஈச்சமரம் |
| உ | - | உரல் | இரண்டு | ஈசல் |
| ஊ | - | ஊதல் | அம்பு | ஆறு |

முதல் எழுத்தை எழுதுவேன்.

___ ம்மா ___ டு ___ லை ___ சல் ___ ரல் ___ தல்

படத்துடன் எழுத்தை இணைப்போம்.

| | | |
|---|---|---|
|  | அ |  |
| | ஆ | |
|  | இ |  |
| | ஈ | |
|  | உ |  |
| | ஊ | |

# 10. கடற்கரை

● உரையாடி மகிழ்வோம்!




**உரையாடி மகிழ்வோம்!**

1. படத்தில் நீங்கள் என்னென்ன பார்க்கிறீர்கள்? 2. நீங்கள் கடற்கரைக்கு சென்று இருக்கிறீர்களா?
3. நீங்கள் கடற்கரைக்கு சென்றால் என்னென்ன செய்வீர்கள்? 4. என்னனென்ன சேகரிப்பீர்கள்?
5. கடற்கரையில் மகிழும்போது எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும்?

# 11. எழுத்துகள் நாங்கள் வந்திருக்கிறோம் பாருங்க!

• பாடி மகிழ்வோம்.



எஎஎஎ நானுங்க
எலி கொறித்த ரொட்டியிலே
எறும்பு மொய்க்குதுங்க!



ஏஏஏஏ நானுங்க
ஏணியிலே ஏறி ஏழு பழம்
பறிச்சுத் தாருங்க!

ஐஐஐஐஐ நானுங்க
ஐப்பசியில் மழையடிக்குது
ஐஸ் கிரீம் எதுக்குங்க!





ஒஒஒஒ நானுங்க
ஒரே ஒரு ஒட்டகம்தான்
ஒளிஞ்சி இருக்குங்க!

ஓஓஓஓஓ நானுங்க
ஓடுகின்ற ஓடத்திலே
ஏறிப் போகலாங்க!





ஔஔஔஔஔ பாருங்க
ஔவையாரின் ஆத்திசூடி
படித்து மகிழுங்க!

-குருங்குளம் முத்துராஜா

**ஆசிரியர் குறிப்பு :**

- மாணவர்களைப் பாடலை உரத்தக் குரலில் பாடச் சொல்லவும்.
- எ-ஔ வரையுள்ள உயிர் எழுத்துகளின் வரிசை மற்றும் அந்த உயிர் எழுத்துகளில் தொடங்கும் வார்த்தைகளில் கவனம் கொள்ள மாணவர்களுக்கு உதவவும்.

● படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்!

எ



எலி

ஏ



ஏணி

ஐ



ஐவர்

● எழுதிப் பழகுவேன்!

எ எ எ எ எ எ

எ எ எ எ எ எ

ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

**ஆசிரியர் குறிப்பு :**

- படங்களில் அறிமுகமாகும் எழுத்துகளின் வேறுபல சொற்களையும் கூறச் செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்.

● படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்!



ஒ

ஒட்டகம்



ஓ

ஓடம்



ஔ

ஔவை



ஃ

எஃகு கேடயம்

● எழுதிப் பழகுவேன்!

ஒ ஒ ஒ ஒ ஒ ஒ

ஒ ஒ ஒ ஒ ஒ ஒ

ஒ ஒ ஒ ஒ ஒ ஒ

ஔ ஔ ஔ ஔ

ஔ ஔ ஔ ஔ

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

- வட்டத்தில் உள்ள எழுத்து உடைய சொல்லை வண்ணமிடுவேன்.

| | | | |
|---|---|---|---|
| எ | எறும்பு | அல்லி | ஓணான் |
| ஏ | ஏணி | ஓடம் | உடும்பு |
| ஐ | ஐந்து | இஞ்சி | ஊஞ்சல் |
| ஒ | ஐவர் | ஒட்டகம் | ஆடு |
| ஓ | எண்பது | ஓடம் | அம்மா |
| ஔ | எறும்பு | ஔவை | ஈசல் |

- எழுத்துடன் படத்தை இணைப்பேன்.

5





எ

ஔ

ஒ

ஃ

ஓ

ஏ

ஐ









● புள்ளிகளை இணைப்பேன்; வண்ணமிடுவேன்!




● யானையில் எழுதப்பட்டுள்ள உயிர் எழுத்துகளை அகர வரிசையில் எழுதுவேன்.

____ ____ ____ ____ ____ ____ ____

____ ____ ____ ____ ____ ____

● வாருங்கள் வரைவோம் :



**ஆசிரியர் குறிப்பு :** கரும்பலகையில் ஒரு பூனையின் படம் வரைந்து ஒவ்வொரு குழந்தையையும் கண்ணை மூடிக்கொண்டு அதற்கு வால் வரையச் செய்யவும்.

# 12. அ...ஆ...இ...ஈ... கற்போம்

## • ஆடி, பாடி மகிழ்வோம்!



அம்மா தான் வந்தாங்க!
ஆப்பம் சுட்டு தந்தாங்க!

இலையில் இரண்டு வச்சாங்க!
ஈடு இணை இல்லைங்க!

உண்மையான அன்புடன்
ஊறி இனிக்கும் பாலிலே,

எடுத்து சுவைத்து பாருங்க!
ஏக்கம் தீர்ந்து போகுங்க!

ஐவர் எங்கள் வீட்டிலே
ஒன்றாய் உண்டு மகிழ்கிறோம்.

ஓமம் என்றும் இயற்கையாய்
ஔடதமாய் காத்திடும்.

அஃதே இன்பம் தந்திடும்!

-குருங்குளம் முத்துராஜா



**உரையாடி மகிழ்வோம்!**

1. உனக்கு பிடித்த சிற்றுண்டி எது?
2. உனக்கு ஆப்பத்துடன் என்ன சேர்த்து சாப்பிட பிடிக்கும்?
3. எப்பொழுதெல்லாம் உங்கள் வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து சாப்பிடுவீர்கள்?
4. நீங்கள் வீட்டில் பெற்றோர்களுக்கு என்ன உதவிகள் செய்வீர்கள்?

# 13. மெய் எழுத்துகள் (க், ங், ச்)

- படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்!




தக்காளி




சங்கு




தச்சர்

- சொல்ல கேட்டு கூறுவோம்; படிப்போம்.

| | | |
|---|---|---|
| மூக்கு | பங்கு | பச்சை |
| நாக்கு | சங்கம் | எலுமிச்சை |
| பாக்கு | சிங்கம் | அச்சம் |

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகும் எழுத்தை உடைய வேறு பல சொற்களையும் கூறச்செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்.

- படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.










- எழுதிப் பழகுவேன்!

க் க் க் க் க் க்

க் க் க் க் க் க்

ங் ங் ங் ங் ங் ங்

ங் ங் ங் ங் ங் ங்

ச் ச் ச் ச் ச் ச்

ச் ச் ச் ச் ச் ச்

# 14. நான் யார்?

- புதிர்களுக்கு விடை அளிப்பேன்.



தலையில் கிரீடம் எனக்கு உண்டு;
பலவித உருவம் எனக்கு உண்டு;
பலவித நிறத்திலும் கிடைத்திடுவேன்.



பச்சை நிறத்தில் உடல் உண்டு;
பாவையர் விரல்போல் தோற்றமுண்டு;
உள்ளே முத்துகள் பல உண்டு.



நிறமோ சிவப்பு!
சுவையோ புளிப்புடன் இனிப்பு!
சமைக்காமலும் என்னைச் சாப்பிடலாம்.



எளிதில் எங்கும் கிடைத்திடுவேன்;
வகைகள் என்னில் பல உண்டு;
பலவகை சத்துகள் எனில் உண்டு.



உருவில் பார்க்க பெரியவன்;
மஞ்சள் நிறத்தில் இருப்பவன்;
இனிப்பு சுவையால் நிறைந்தவன்!



நிலத்தின் அடியில் என் வீடு;
ஆற்றல் என்னில் அதிகம் உண்டு;
வறுவலில் பொரியலில் மகிழ்வதுண்டு.

**உரையாடி மகிழ்வோம்!**

1. காய்கறி 'பேல்' செய்வோமா?
2. ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு பொருள்களைக் கொண்டு வருவோம். சிறிது சிறிது சிறிதாக நறுக்கிய தக்காளி, வெங்காயம், வெள்ளரிக்காய், பரங்கிக்காய் துண்டுகள், உப்பு, சர்க்கரை, பொரி, ஓமப்பொடி அனைத்தையும் ஒருமித்து சேர்த்து நன்றாக கலந்து கொள்வோம். அனைவரும் பகிர்ந்து சாப்பிடுவோம்.

- **படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.**

ஞ்



ஊஞ்சல்

ட்



லட்டு

ண்



நண்டு

- **சொல்லக் கேட்டு கூறுவோம்; படிப்போம்.**

| | | |
|---|---|---|
| பஞ்சு | சிட்டு | கண் |
| பஞ்சம் | பட்டு | மண் |
| மஞ்சள் | எட்டு | வண்டு |

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகும் எழுத்தை உடைய வேறுபல சொற்களையும் கூறச் செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்.

• எழுத்துடன் படத்தையும் சொல்லையும் இணைப்பேன்.



ஞ்

நண்டு



ட்

இஞ்சி



ண்

லட்டு

• எழுதிப் பழகுவேன்!

ஞ் ஞ் ஞ் ஞ் ஞ் ஞ்

ட் ட் ட் ட் ட் ட்

ண் ண் ண் ண் ண் ண்

# 15. ஆரோக்கியமாக வாழ்வோம்

• உரையாடி மகிழ்வோம்!



என் பெயர் வாழைப்பழம்;
எளிதாய் சாப்பிடலாம்!



என் பெயர் மாம்பழம்;
முக்கனியில் முதல்கனி நான்!



என் பெயர் தர்பூசணி;
வெயிலுக்கு இதமானவன்!



என் பெயர் திராட்சை;
குலைகுலையாய் தொங்குவேன்!



நான் தான் நாவல் பழம்;
கருநீலநிறத்தில் இருப்பேன்!

என் பெயர் கொய்யா;
கிளிக்கும் அணிலுக்கும் பிடித்த கனி!



அந்தந்த பருவங்களில் கிடைக்கும் பழங்களை விரும்பி
உண்போம்! ஆரோக்கியமாக வாழ்வோம்!

**ஆசிரியர் குறிப்பு :**

- இந்தப் பழங்களைப் போல் நீ உன்னை குறித்து விவரம் கூறவும். எடுத்துக்காட்டு : நான் முதலாம் வகுப்பு படிக்கும் மாணவன். என் பெயர்....
- குலை குலையாய் முந்திரிக்காய். நரியே! நரியே! சுத்தி வா! . . . . . கண்டுபிடி! என்ற விளையாட்டை விளையாடுவோமா?

- **படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்!**





நத்தை





பந்து





கப்பல்

- **சொல்லக் கேட்டு படிப்போமா!**

| | | |
|---|---|---|
| வாத்து | ஆந்தை | அப்பா |
| பத்து | தந்தை | பாப்பா |
| மத்து | சந்தை | ஆப்பம் |

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகும் எழுத்தை உடைய வேறுபல சொற்களையும் கூறச் செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்

- படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.




த்



ந்



ப்

- எழுதிப் பழகுவேன்.

த் த் த் த் த் த்

ந் ந் ந் ந் ந் ந்

ப் ப் ப் ப் ப் ப்

## 16. மியாவ் மியாவ் பூனைக்குட்டி



- **பாடி மகிழ்வோம்!**

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
எங்கள் வீட்டின் செல்லக்குட்டி!
||மியாவ்||

காலை சுற்றும் பூனைக்குட்டி
பாலை குடிக்கும் பூனைக்குட்டி!
||மியாவ்||



மெத்தையில் புரளும் பூனைக்குட்டி
மேனியை முறுக்கும் பூனைக்குட்டி!
||மியாவ்||

ஓடி குதிக்கும் பூனைக்குட்டி
ஓயாமல் விளையாடும் பூனைக்குட்டி!
||மியாவ்||



நூல்பந்து கிடைத்தால் பூனைக்குட்டி
வியந்தே விளையாடும் பூனைக்குட்டி!
||மியாவ்||





**உரையாடி மகிழ்வோம்!**

1. வீட்டில் வளர்க்கும் செல்ல விலங்குகள் எவை எவை?
2. பூனைக்குட்டிகள் என்னென்ன நிறங்களில் இருக்கும்?
3. நீ பூனைக்குட்டியை எவ்வாறு பார்த்துக் கொள்வாய்?

- படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.




மரம்




பாய்




மலர்

- சொல்லக் கேட்டு படிப்போமா!

| | | |
|---|---|---|
| பம்பரம் | நாய் | தேர் |
| பண்டம் | காய் | ஏர் |
| வாய் | தாய் | வேர் |

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகும் எழுத்தை உடைய வேறுபல சொற்களையும் கூறச் செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்

- படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.










- எழுதிப் பழகுவேன்.

ம் ம் ம் ம் ம் ம்

ம் ம் ம் ம் ம் ம்

ய் ய் ய் ய் ய் ய்

ய் ய் ய் ய் ய் ய்

ர் ர் ர் ர் ர் ர்

ர் ர் ர் ர் ர் ர்

## 17. நரிகளும் திராட்சைத் தோட்டமும் (படக் கதை)

- படத்தைப் பார்த்து கதையைக் கூறுவேன்.



**உரையாடி மகிழ்வோம்!**

1. நரிகள் எட்டாத பழத்திற்காக என்ன திட்டம் போட்டன?
2. ஒவ்வொரு நரியும் என்னென்ன கொண்டு வந்தன?
3. நரிகளின் கூட்டு முயற்சி வெற்றி பெற்றதா? சிந்திப்போம்! பேசுவோம்!
4. நீங்கள் படப் புத்தகங்கள், கதைப் புத்தகங்கள் வாசிப்பீர்களா?

- படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.

ல்



சேவல்

வ்



செவ்வந்தி

ழ்



சிமிழ்

- சொல்லக் கேட்டு படிப்போம்; எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| மயில் | செவ்வானம் | தமிழ் |
| குயில் | செவ்வாய் | குமிழ் |
| வயல் | செவ்வகம் | யாழ் |

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகும் எழுத்தை உடைய வேறுபல சொற்களையும் கூறச் செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்.

● படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.



ல்



வ்



ழ்

● எழுதிப் பழகுவேன்.

ல் ல் ல் ல் ல் ல்

ல் ல் ல் ல் ல் ல்

வ் வ் வ் வ் வ் வ்

ழ் ழ் ழ் ழ் ழ் ழ்

ழ் ழ் ழ் ழ் ழ் ழ்

# 18. காட்டுக்குள்ளே ஓவியப்போட்டி

- **உரையாடி மகிழ்வேன். வினாக்களை வினவுவேன்.**



**உரையாடி மகிழ்வோம்!**

1. படத்தில் படம் வரைவது யார்?
2. இப்படத்தில் காணப்படும் விலங்குகள் மற்றும் பறவைகள் யாவை?
3. உனது கற்பனையில் தோன்றும் ஓவியம் ஒன்று வரைக.
4. படத்தைப் பார்த்து கற்பனை செய்து கதையைக் கூறவும்.

- படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.






தேள்






நாற்காலி






மீன்

- சொல்லக் கேட்டு படிப்போம்; எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| எள் | பற்கள் | மான் |
| முள் | சொற்கள் | மீன் |
| தாள் | காற்றாடி | காளான் |

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகும் எழுத்தை உடைய வேறுபல சொற்களையும் கூறச் செய்யவும் மற்றும் எழுதச் செய்யவும்.

- **எழுதிப் பழகுவேன்!**

ள் ள் ள் ள் ள் ள்

ற் ற் ற் ற் ற் ற்

ன் ன் ன் ன் ன் ன்

- **நிரப்புவேன்.**



தே _____



தாழ்ப்பா _______



ப ____ ளி



நா _____ காலி



கா _____ றாடி



வெ _____ றிலை



மா _____



காளா_____



மீ ____

## 19. உடல் உறுப்புகள்

- என்னைப் பற்றி நானே கூறுவேன்.




### உரையாடி மகிழ்வோம்!

1. நடக்க உதவும் உறுப்பு எது?
2. எதனால் நீ பொருள்களைப் பார்ப்பாய்?
3. வாயின் பயன்கள் யாவை?
4. பள்ளியின் மணி ஓசையை எந்த உறுப்பின் உதவியால் கேட்பாய்?

# மெய் எழுத்துகள்

• நானே படிப்பேன்.

| | | |
|---|---|---|
| க் | த் | ல் |
| ங் | ந் | வ் |
| ச் | ப் | ழ் |
| ஞ் | ம் | ள் |
| ட் | ய் | ற் |
| ண் | ர் | ன் |

# நாமும் செய்யலாம்!

**கொடுக்கப்பட வேண்டிய கட்டளைகள் :**

- **ஐந்து எண்ணுவதற்குள் வட்டமாக அமருங்கள். 1..2..3...**
- **வெண்டைக்காய் துண்டை எடுத்துக் கொள்ளுங்கள்.**
- **வண்ணக் கலவையில் தொட்டுக் கொள்ளுங்கள்.**
- **விதவிதமான வடிவங்களை அமையுங்கள்.**
- **இதேபோல் பெருவிரல் அல்லது பஞ்சை வண்ணக் கலவையில் தொட்டு பல வடிவங்களை அமையுங்கள்.**



**ஆசிரியர் குறிப்பு :**

- இதுபோன்று வேறு செயல்களைச் செய்வதற்கான கட்டளைகளை பிற மாணவர்களுக்கு தர உதவவும்.
- பிற மாணவர்கள் தரும் கட்டளைகளை புரிந்து பின்பற்றி செயல்கள் செய்கின்றனரா என உற்றுநோக்கித் தேவைப்படும் இடங்களில் வழிகாட்டுதல் தரவும்.

# 20.துட்டு தந்தால் லட்டு

- **சந்தத்துடன் பாடி மகிழ்வேன்!**



வெங்கு வெங்கு வெங்கு
வெங்கு ஊதினான் சங்கு.
நுங்கு நுங்கு நுங்கு
நுங்கில் எனக்கும் பங்கு.





வள்ளி வள்ளி வள்ளி
வள்ளி கொலுசு வெள்ளி.
பள்ளி பள்ளி பள்ளி
பள்ளிச் செல்வோம் துள்ளி.





பட்டு பட்டு பட்டு
பட்டு வாயில் லட்டு.
துட்டு துட்டு துட்டு
துட்டுத் தந்தால் லட்டு.

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒலிநயத்தைப் புரிந்து பாராட்ட ஊக்குவிக்கவும்.
- பெயர்களை மாற்றி இதுபோன்ற ஒலிநயப் பாடல்களை உருவாக்க மாணவர்களுக்கு உதவவும்.
- எ.கா. : நந்து நந்து நந்து நந்து கையில் பந்து

# 21. என் பட்டம்

- **பாடி மகிழ்வேன்!**

வானவில்லின் வண்ணங்களில்
வானில் பறக்குது என் பட்டம்!

நூலும் வாலும் உடலுடனே
உயரே பறக்குது என் பட்டம்!

நூலை ஆட்டினால் வாலை ஆட்டி
மேலே பறக்குது என் பட்டம்!

பாம்பைப் போல அசைந்து நெளிந்து
விண்ணில் போகுது என் பட்டம்!

எந்தன் பட்டம் பறப்பதையே
பார்த்து நாமும் மகிழ்வோமே!



**உரையாடி மகிழ்வோம்!**

1. விளையாட உதவும் பொருள்கள் யாவை?
2. பட்டம் செய்ய என்னென்ன பொருள்கள் வேண்டும்?
3. இந்தப் படத்தை பற்றி பேசுவோமா?
4. இப்படத்தில் எத்தனை சிறுவர் சிறுமியர் உள்ளனர்?

## 22. உயிர்மெய் எழுத்துகள் (க முதல் ன வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.







க்+அ-க

 

கரும்பு கப்பல்

ச்+அ-ச

 

சக்கரம் சட்டை

த்+அ-த

 

தவளை தராசு

ந்+அ-ந

 

நரி நத்தை

ப்+அ-ப

 

பட்டம் பந்து

ம்+அ-ம

 

மரம் மயில்

வ்+அ-வ

 

வலை வண்டு

**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத அதே எழுத்துடைய பிற சொற்களை கூற, எழுத உற்சாகப்படுத்தவும்.

- சொல்லக்கேட்டு எழுதுவோம்!

| | | |
|---|---|---|
| மரம் | பழம் | பட்டம் |
| வனம் | கட்டம் | மலர் |

- படிப்போம்! எழுதுவோம்!



| | | |
|---|---|---|
| வனம் | வனம் | மலர்வனம் |
| மலர் | மலர் | வாடாமலர் |
| பழம் | பழம் | பனம்பழம் |

- விடுபட்ட எழுத்துகளை எழுதுவேன்.



___ ப்பல்



___ ட்டம்



___ ரம்



___ க்கரம்

- எழுதிப் பழகுவேன்!

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர

ல வ ழ ள ற ன

# 23. பள்ளியில் புதுமை

● உரையாடி மகிழ்வோம்!



மேரி : என்னே, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாயே!

சல்மா : இன்று எங்கள் வகுப்பில் ஒரு ஸ்மார்ட் டி.வி. வைத்தார்கள். இனிமேல் எங்கள் வகுப்பை டிஜிட்டல் வகுப்பறை என்பர்.

மேரி : அப்படியா! புதுமையாக உள்ளதே! அதுல என்ன விசேசம்?

சல்மா : அதுல பாடம் படிக்கலாம்; படம் வரையலாம் மற்றும் கதைகள், பாடல்கள், கார்ட்டூன்கள் பார்த்தும் கேட்டும் மகிழலாம்.

மேரி : கேட்கவே மிகவும் சந்தோசமாக உள்ளதே! புதுமையான வகுப்பு! ஆனந்தமான படிப்பு! உங்க பள்ளிக்கு வர எனக்கும் ஆசையாக உள்ளது.

**ஆசிரியர் குறிப்பு :**

- நவீன தொழில்நுட்பம், ICT, ஸ்மார்ட் எழுதுபலகை, டிஜிட்டல் வகுப்பறை போன்றவற்றைப் பற்றி மாணவர்களுடன் முறைசாரா இயல்பான கலந்துரையாடலில் ஈடுபடவும். மாணவர்களை கலந்துரையாடலில் பங்குபெற உற்சாகப்படுத்தவும்.
- மாணவர்கள் தங்களுடைய சொந்த அனுபவங்களைக் கூறுவதற்கு வாய்ப்பளிக்கவும்.

# உயிர்மெய் எழுத்துகள் (கா முதல் னா வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.

கா ஙா சா ஞா டா ணா தா நா பா மா யா ரா லா வா ழா ளா றா னா



க்+ஆ-கா

காகம்



ச்+ஆ-சா

சாட்டை



த்+ஆ-தா

தாத்தா



ந்+ஆ-நா

நாய்



ப்+ஆ-பா

பாப்பா



ம்+ஆ-மா

மாம்பழம்



ய்+ஆ-யா

யானை



ழ்+ஆ-ழா

குழாய்

**ஆசிரியர் குறிப்பு :**

- ஒவ்வொரு படத்தையும் பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேசத் தூண்டவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபல சொற்களையும் கூற மற்றும் எழுதச் செய்யவும்.

## • அறிந்து கொள்வோம்!



என் பெயர் மேகலை.
உன் பெயர் என்ன?



என் பெயர் முற்றுப்புள்ளி.
என்னுடன் வாக்கியம் முடியும்.



என் பெயர் குமரன்.
உன் பெயர் என்ன?



என் பெயர் கேள்விக்குறி,
நான் கேள்வியின் அடையாளம்.
என்னைப் பார்த்ததும் நீங்கள் பதில்
அளிக்க வேண்டும்.

## • படிப்போம்! எழுதுவோம்!

யார் நட்ட மாமரம்?

தாத்தா நட்ட மாமரம்.

யார் பறித்தார் மாம்பழம்?

மாமா பறித்தார் மாம்பழம்.

## • சொற்களை உருவாக்குவேன் :

பா, வா → ல் → [ ][ ], [ ][ ]

பா, மா → டம் → [ ][ ][ ], [ ][ ][ ]

## • எழுதிப் பழகுவேன்.

கா ஙா சா ஞா டா ணா

தா நா பா மா யா ரா

லா வா ழா ளா றா னா

## உயிர்மெய் எழுத்துகள் (கி முதல் னி வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.

கி ஙி சி ஞி டி ணி தி நி பி மி யி ரி லி வி ழி ளி றி னி



க்+இ-கி

கிணறு

சீ்+இ-சி



சிங்கம்



ட்+இ-டி

கரடி

ண்+இ-ணி



மணி



த்+இ-தி

திராட்சை

ய்+இ-யி



மயில்



ர்+இ-ரி

நரி

ல்+இ-லி



எலி



வ்+இ-வி

விளக்கு

ற்+இ-றி



விசிறி

**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும். படங்களில் அறிமுகமாகாத அதே எழுத்துடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

- **படிப்போம்! எழுதுவோம்!**

| | |
|---|---|
| படி | மணி |
| விரல் | மயில் |
| பல்லி | பள்ளி |

- **படங்களின் பெயரை எழுதுவேன்:**



________



________



________



________

- **கேள்வி-பதில் நேரம்**

- கிளி எப்படி வந்தது?
  கிளி பறந்து வந்தது.
- கிளி எங்கே அமர்ந்து கொண்டது?
  கிளையில் அமர்ந்து கொண்டது.
- கிளி என்ன தின்றது?
  மாங்கனி தின்றது.

- **எழுதிப் பழகுவேன்:**

கி ஙி சி ஞி டி ணி

தி நி பி மி யி ரி

லி வி ழி ளி றி னி

# உயிர்மெய் எழுத்துகள் (கீ முதல் னீ வரை)

- படத்தைப் பார்த்து பெயரை கூறுவேன்; எழுத்தை அறிவேன்.

க்+ஈ–கீ



கீரி

ச்+ஈ–சீ



சீப்பு

த்+ஈ–தீ




தீப்பெட்டி

ந்+ஈ–நீ



நீச்சல்

ப்+ஈ–பீ



பீரங்கி

ம்+ஈ–மீ



மீன்

**ஆசிரியர் குறிப்பு :**
- படத்தைப் பார்த்து அதைப்பற்றி குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

● படிப்போம்; எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| மீதி | பன்னீர் | சீரகம் |
| வீதி | தண்ணீர் | பீரங்கி |
| இளநீர் | கீரி | வெந்நீர் |

விண்மீன் பார்!
தண்ணீர் பிடி!

வெந்நீர் குடி!
நீச்சல் அடி!



## ● நானும் கவிதை கூறுவேன்!

சின்ன சின்ன அணில்!
சிங்கார அணில்!

கொட்டைக் கொறிக்கும் அணில்!
கொய்யாவை விரும்பும் அணில்!

எனக்குப் பிடித்த அணில்!
எங்கள் வீட்டின் அணில்!

● எழுதிப் பழகுவேன்!

கீ ஙீ சீ ஞீ டீ ணீ

தீ நீ பீ மீ யீ ரீ

லீ வீ ழீ ளீ றீ னீ

# 24. எண்ணி மகிழ்வோம்

● **பாடி மகிழ்வோம்!**



ஒன்று ஒன்று ஒன்று
யானைக்குத் தும்பிக்கை ஒன்று.

இரண்டு இரண்டு இரண்டு
மாட்டுக்கு கொம்பு இரண்டு.

மூன்று மூன்று மூன்று
முக்கனிகள் மூன்று.

நான்கு நான்கு நான்கு
நாய்க்கு கால்கள் நான்கு.

ஐந்து ஐந்து ஐந்து
நமது புலன்கள் ஐந்து.

ஆறு ஆறு ஆறு
நாவின் சுவைகள் ஆறு.

ஏழு ஏழு ஏழு
வாரத்தின் நாட்கள் ஏழு.

எட்டு எட்டு எட்டு
உலகில் திசைகள் எட்டு.

ஒன்பது ஒன்பது ஒன்பது
தானிய வகைகள் ஒன்பது.

பத்து பத்து பத்து
கைகளில் விரல்கள் பத்து.

-ரெ. சிவா

**ஆசிரியர் குறிப்பு :**

● பாடலைப் பாடியபின் மாணவர்களைத் தனியாக, குழுவாக அபிநயத்துடன் பாட உற்சாகப்படுத்தவும். ● எண்களை வரிசையாகவும் எண் பெயர்களுடனும் புரிய வைக்கவும்.

# உயிர்மெய் எழுத்துகள் (கு முதல் னு வரை)

- படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.









க்+உ-கு

குரங்கு

ச்+உ-சு



சுத்தியல்

ட்+உ-டு



வீடு

த்+உ-து



மத்து

ந்+உ-நு



நுங்கு

ப்+உ-பு



புறா

ம்+உ-மு



முயல்

ர்+உ-ரு



கரும்பு

**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பேச குழந்தைகளை உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

- படிப்போம்! எழுதுவோம்!

| | | |
|---|---|---|
| அருவி | பணிவு | குளிர் |
| விறகு | காற்று | முயல் |

- படத்தைப் பார்த்து விடுபட்ட எழுத்துகளை நிரப்பவும்.




- எழுதிப் பழகுவேன்!

கு ஙு சு ஞு டு ணு

து நு பு மு யு ரு

லு வு ழு ளு று னு

# உயிர்மெய் எழுத்துகள் (கூ முதல் னூ வரை)

கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ றூ னூ

- படத்தைப் பார்த்து பெயரைக் கூறுவேன்; எழுத்தை அறிவேன்.

ந் + ஊ – நூ



நூல்கண்டு

க் + ஊ – கூ



கூடு

த் + ஊ – தூ



தூண்டில்

ச் + ஊ – சூ



சூரியன்

ம் + ஊ – மூ



மூங்கில்

ப் + ஊ – பூ



பூரி

**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

- **படிப்போம்; எழுதுவோம்.**

பூண்டு நூற்கண்டு மூன்று குண்டூசி சூரியன்

தூண்டில் பூங்கா வல்லூறு பூஞ்செடி

- **சொல்லக் கேட்டு எழுதுக!.**

1. பூங்கா 2. மூன்று 3. வல்லூறு 4. சூரியன்

- **கோடிட்டு இணைப்பேன்!**

1. பறவைகள் கட்டுவது.
2. மீன் பிடிக்க உதவுவது.
3. தலையில் சூடுவது.
4. உடலுக்கு நன்மை பயப்பது.






- **எழுதிப் பழகுவேன்;**

சூ நூ கூ ஞூ டூ ணூ

தூ நூ பூ மூ யூ ரூ

லூ வூ ழூ ளூ றூ ஞூ

# 25. நல்ல பழக்கவழக்கங்கள்

● **நானே பேசுவேன்!**

படங்களைப் பார்ப்பேன். நல்ல பழக்கவழக்கங்களைப் பற்றிக் கூறுவேன்!




**உரையாடி மகிழ்வோம்!**

- நீங்கள் காலையில் எப்பொழுது கண் விழிப்பீர்கள்?
- சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் ஏன் கைகளைக் கழுவ வேண்டும்?
- இரவு படுக்கைக்குச் செல்லும் முன் என்ன செய்வாய்?
- உங்களுடைய அன்றாட பழக்கவழக்கங்களைக் கூறுக.

# உயிர்மெய் எழுத்துகள் (கெ முதல் னெ வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.

கெ ஙெ செ ஞெ டெ ணெ தெ நெ பெ மெ யெ ரெ லெ வெ ழெ ளெ றெ னெ

க்+எ-கெ



கெண்டி

ச்+எ-செ



செடி

ந்+எ-நெ



நெல்

த்+எ-தெ



தென்னை

ப்+எ-பெ



பெட்டி

ம்+எ-மெ



மெழுகு

வ்+எ-வெ



வெங்காயம்

ண்+எ-ணெ




எண்ணெய்

**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

- **படிப்போம்! எழுதுவோம்!**

| | | |
|---|---|---|
| கெண்டை | பெண் | வெல்லம் |
| செங்கல் | நெருப்பு | தெப்பம் |

நெல்லில் அரிசி உள்ளது. எள்ளில் எண்ணெய் உள்ளது.

- **கண்டுபிடிப்போம்! வட்டமிடுவோம்!**

| | | | |
|---|---|---|---|
| பெ | ட் | டி | வெ |
| செ | ம் | ம | ண் |
| டி | நெ | ல் | ணெ |
| கெ | ண் | டி | ய் |

- **எழுதிப் பழகுவேன்!**

கெ ஙெ செ ஞெ டெ ணெ

தெ நெ பெ மெ யெ ரெ

லெ வெ ழெ ளெ றெ னெ

# 26. வண்ணங்கள்

- நிறங்களின் பெயர்களைக் கூறுவேன்.



காகத்தின் நிறம் கருப்பு.
பாலின் நிறம் வெள்ளை.






இலையின் நிறம் பச்சை.
தக்காளியின் நிறம் சிவப்பு.





எலுமிச்சை நிறம் மஞ்சள்.
எங்கள் பந்தின் நிறம் நீலம்.



- வானவில்லின் வண்ணங்களைக் கூறுவேன்.



- பூக்களுக்கு வண்ணமிடுவேன்.



கருப்பு வெள்ளை பச்சை



சிவப்பு மஞ்சள் நீலம்

## 27. தோ... தோ... நாய்க்குட்டி

- பாடி மகிழ்வேன்!



தோ... தோ... நாய்க்குட்டி!
துள்ளி வரும் நாய்க்குட்டி!



பள்ளி விட்டு நான் வந்தால்
பாய்ந்து வரும் நாய்க்குட்டி!



பக்கம் வந்து வாலை ஆட்டி
பாசம் காட்டும் நாய்க்குட்டி!

பந்தை தூரம் வீசினால்
கவ்வி வரும் நாய்க்குட்டி!



நான் வளர்க்கும் நாய்க்குட்டி!
நன்றி யுள்ள நாய்க்குட்டி!



**உரையாடி மகிழ்வோம்!**

1. நீங்கள் நாய்க்குட்டியை எவ்வாறு கூப்பிடுவீர்கள்?
2. நாய்க்குட்டி வாலை ஆட்டக் காரணம் என்ன?
3. இந்தப் பாடலில் நீ என்னென்ன பார்க்கிறாய்?
4. உங்களுக்குப் பிடித்த செல்ல விலங்கு பற்றி கவிதை எழுதவும்.

# உயிர்மெய் எழுத்துகள் (கே முதல் னே வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.




**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூறவும், எழுதவும் உற்சாகப்படுத்தவும்.

- **நானே படிப்பேன்! எழுதுவேன்!**

| | | | |
|---|---|---|---|
| கேடயம் | நேற்று | வேகம் | மேசை |
| சேவல் | பேருந்து | தேனீ | வேலி |

வாக்கியம் அமைப்போமா! **எ.கா. :** சேவல் காலையில் கூவும்.

| | | |
|---|---|---|
| பட்டம் | சேவல் | பெயர் |

- **சொல் கோபுரம் அமைப்போம்!**

1. க்+ஏ
2. இனிப்பாக இருக்கும்
3. இது கருத்தால் மழை பெய்யும்
4. ஒரு சாலை வழி வாகனம்
5. சிறு தானியங்களில் ஒன்று



(கே,மேகம்,தேன்,கேழ்வரகு,பேருந்து)

- **எழுதிப் பழகுவேன்;**

கே ஙே சே ஞே டே ணே

தே நே பே மே யே ரே

லே வே ழே ளே றே னே

## உயிர்மெய் எழுத்துகள் (கை முதல் னை வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.







க்+ஐ-கை



பலகை

ச்+ஐ-சை



பச்சை

ட்+ஐ-டை



குடை

த்+ஐ-தை



நத்தை

ம்+ஐ-மை



ஆமை

ர்+ஐ-ரை



குதிரை

ல்+ஐ-லை



மலை

ழ்+ஐ-ழை



வாழை

ன்+ஐ-னை



பானை

**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

● படிப்போம்! எழுதுவோம்!

தையல் வீணை பானை

பாறை யானை காலை

● மீண்டும் மீண்டும் படிப்போம்! வேகமாய் படிப்போம்.

பச்சை வாழை மரத்தில்
நகர்ந்து செல்லும் நத்தை.



அத்தை தைத்த மெத்தை
மெத்தை மீது நத்தை.

எழுத்துகளை சொற்களுடன் இணைப்பேன்! சொற்களை எழுதுவேன்.

| | | |
|---|---|---|
| கை | நத்தை | ______ |
| மை | பலகை | ______ |
| னை | ஆமை | ______ |
| தை | யானை | ______ |

● எழுதிப் பழகுவேன்!

கை ஙை சை ஞை டை ணை

தை நை டை மை யை ரை

லை வை ழை ளை றை னை

# 28. சுவைகள்

- **பாடி மகிழ்வோம்!**



**இனிப்பு! இனிப்பு! இனிப்பு!**
**எது இனிப்பு சொல்லு?**
**கரும்பு...!**
**கரும்பு இனிப்பு!**



**புளிப்பு! புளிப்பு! புளிப்பு!**
**எது புளிப்பு சொல்லு?**
**மாங்காய்...!**
**மாங்காய் புளிப்பு!**



**கசப்பு! கசப்பு! கசப்பு!**
**எது கசப்பு சொல்லு?**
**பாகற்காய்...!**
**பாகற்காய் கசப்பு!**



**துவர்ப்பு! துவர்ப்பு! துவர்ப்பு!**
**எது துவர்ப்பு சொல்லு?**
**பாக்கு...!**
**பாக்கு துவர்ப்பு!**



**உவர்ப்பு! உவர்ப்பு! உவர்ப்பு!**
**எது உவர்ப்பு சொல்லு?**
**உப்பு...!**
**உப்பு உவர்ப்பு!**



**கார்ப்பு! கார்ப்பு! கார்ப்பு!**
**எது கார்ப்பு சொல்லு?**
**மிளகாய்...!**
**மிளகாய் கார்ப்பு!**

**விளையாடுவோம் வாங்க!**

- சுவை, பொருள் என இரு குழுக்களாக பிரித்து, சுவையை ஒரு குழு கூறும்போது அதற்கு பதில் மொழியாக இரண்டாம் குழு அதற்குரிய பொருளைக் கூற வேண்டும். இவ்வாறு தொடர்ந்து சொல் விளையாட்டை தொடர வேண்டும்.
- பாடத்தில் உள்ள படங்களைப் பற்றிக் கூறவும்.

# உயிர்மெய் எழுத்துகள் (கொ முதல் னொ வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.

| | |
|---|---|
| த்+ஒ-தொ  தொட்டில் | க்+ஒ-கொ  கொடி |
| ச்+ஒ-சொ  சொட்டு | த்+ஒ-தொ  தொப்பி |
| ப்+ஒ-பொ  பொங்கல் | ப்+ஒ-பொ  பொம்மை |
| ம்+ஒ-மொ  மொட்டு | ர்+ஒ-ரொ  ரொட்டி |







**ஆசிரியர் குறிப்பு :**

- படத்தைப் பார்த்து, அதைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டு, குழந்தைகளைப் பேச உற்சாகப்படுத்தவும்.
- படங்களில் அறிமுகமாகாத எழுத்துகளுடைய வேறுபிறச் சொற்களைக் கூற மற்றும் எழுத உற்சாகப்படுத்தவும்.

* **படிப்போம்; எழுதுவோம்!**

தொப்பி பொம்மை ரொட்டி

மொட்டு கொக்கு

* **சரியான பெயர்களை கண்டுபிடித்து எழுதுவேன்:**



1. மரத்தை கொத்துவது __________.
2. மீனைக் கொத்தும் __________.
3. சிறுவன் தலையில் இருப்பது __________.
4. சிறுமி கையில் இருப்பது ________.
5. சிறுமியின் நெற்றியில் இருப்பது __________.

* **எழுதிப் பழகுவேன் :**

கொ ஙொ சொ ஞொ டொ

ணொ தொ நொ பொ மொ

யொ ரொ லொ வொ ழொ

ளொ றொ னொ

## உயிர்மெய் எழுத்துகள் (கோ முதல் னோ வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.

க்+ஒ-கோ



கோமாளி

க்+ஒ-கோ



கோலம்

ச்+ஒ-சோ



சோளம்

த்+ஒ-தோ



தோசை

ப்+ஒ-போ



போர்வை

ம்+ஒ-மோ



மோதிரம்

கோ ஙோ சோ ஞோ

டோ ணோ தோ நோ

போ மோ யோ ரோ

லோ வோ ழோ ளோ

றோ னோ





● **படிப்போம்! எழுதுவோம்!**

| தோடு | சோலை | கோலம் | மோதிரம் |
| --- | --- | --- | --- |

கோலம் போட்ட போர்வையில் அமர்ந்து,
மோதிரம் அணிந்த கோமாளி
சோளத் தோசை சாப்பிட்டார்.



● **விடுபட்ட எழுத்துகளை நிரப்புவேன்!**




● **எழுதிப் பழகுவேன் :**

கோ ஙோ சோ ஞோ டோ
ணோ தோ நோ போ மோ
யோ ரோ லோ வோ ழோ
ளோ றோ னோ

# 29. பொங்கல் விழா



பொங்கல் விழா தமிழர்களின் மிகச்சிறப்பான திருநாளாகும். இது தைத் திங்கள் முதலாம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாள் சூரியனுக்கும் மாடு களுக்கும், இயற்கைக்கும் நன்றி கூறும் பொன்னாள் ஆகும். இன்று வாசலில் கோலமிட்டு, புதுப்பானையில் புதுநெல் அரிசி இட்டு பொங்கல் இடுவர். பொங்கலிடும்போது அனைவரும் புத்தாடை அணிந்து புதுப்பொலிவுடன் திகழ்வர். பொங்கல் பொங்கி வரும் பொழுது **'பொங்கலோ பொங்கல்'** என குரல் எழுப்பி மகிழ்வர்.

- **வினாவிற்கு விடை எழுதுக :**

**1. பொங்கல் பொங்கி வரும் போது எவ்வாறு குரல் எழுப்பி மகிழ்வர்?**

**2. இதைப்போன்று ஏதாவது ஒரு பண்டிகை பற்றி 2,3 வரிகள் எழுதவும்.**

## உயிர்மெய் எழுத்துகள் (கௌ முதல் னௌ வரை)

- படத்தைப் பார்த்து பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்.

வ்+ஔ-வௌ



வௌவால்

ப்+ஔ-பௌ



பௌர்ணமி

க்+ஔ-கௌ



கௌதாரி



ப்+ஔ-பௌ



பௌவம்

கௌ ஙௌ சௌ ஞௌ டௌ ணௌ தௌ நௌ பௌ மௌ யௌ ரௌ லௌ வௌ ழௌ ளௌ றௌ னௌ

- வடமொழி எழுத்துகள் :

ஜ ஷ ஹ க்ஷ ஸ்ரீ

- வடமொழி சொற்கள் :

அஸ்ஸாம் ஜனவரி புஷ்பம் ஹர்ஷர் பக்ஷி ஸ்ரீநகர்

# 30.பள்ளி ஆண்டு விழா

## (வேற்றுமையில் ஒற்றுமை)



கொண்டாடுவோம் கொண்டாடுவோம்!
ஆண்டு விழாவைக் கொண்டாடுவோம்!

சாதிகள் மறந்தே கொண்டாடுவோம்!
இனங்கள் ஒன்றெனக் கொண்டாடுவோம்!

மதங்களில் மனிதம் போற்றிடுவோம்!
பாரம்பரிய நடனம் ஆடிடுவோம்!

கலாச்சார உடைகளில் மிளிர்ந்திடுவோம்!
இந்தியர் நாமென்றே பெருமை கொள்வோம்!

**ஆசிரியர் குறிப்பு :**

- மாணவர்கள் தங்களின் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்களின் உணவு, உடை, மொழி, கலாச்சார வேறுபாடுகளை உற்றுநோக்கிக் கலந்துரையாட ஊக்குவிக்கவும்.

# 31. எங்கள் குரல் கேட்பீர்!

● பாடி மகிழ்வோம்! - படிப்போம்.

கருப்பு வண்ண காகமுமே
கா... கா... என கரைந்ததாம்.




கிளையில் இருந்த கிளியுமே
கீச்... கீச்... என கொஞ்சியதாம்.




குயில் ஒன்று மரத்திலிருந்தே
கூ... கூ... என பாடியதாம்.




கெக்... கெக்... என கோழியுமே
கேணிக்கருகில் கொக்கரித்ததாம்.




கைகள் தட்டவே சேவலுமே
கொக்கரக்கோ... என கூவியதாம்.




கோட்டைக்கு அருகில் க டீ டர், க டீ டர்
என கௌதாரியும் கத்தியதாம்.




**ஆசிரியர் குறிப்பு :**

● பறவைகள் / விலங்குகள் போன்று ஒலி எழுப்ப மாணவர்களை உற்சாகப்படுத்தவும்.

# 32. தமிழ் எழுத்துகளின் அட்டவணை

- படித்துப் பழகவும்; சொல்லிக் கொண்டே எழுதவும்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

**அன்பு குழந்தைகளே!**

யாராவது ஒருவர் உங்களை தகாத முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்கக் கூடாது. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.

1. உங்களை நீங்களே குற்றம் சொல்லாதீர்கள்.
2. நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.
3. நீங்கள் போக்சோ மின் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கும் தெரிவிக்கலாம்.

நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.
நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை, ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.




இந்த பொத்தானை அழுத்தவும்

POCSO e-box ncpcr@gov.in ல் கிடைக்கும்

நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக் கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால்...

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்... ஏனென்றால் சில எண்கள் நல்லவை!
சில எண்கள் வாழ்க்கையை மாற்றும்!!




துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.

புதிய விடியலை நோக்கி

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்

# राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே
बालभारती इयत्ता पहिली (तमिळ)
₹ 61.00